# ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டி மெம்பர்கள்.

## சேலம் விஜயம்.

### பொதுக்கூட்டத்தில் பேச்சு.

(ஒரு நிருபர்)

சேலம், ஜூன், 3.

ஹிந்தி எதிர்ப்புக்கமிட்டி மெம்பர்களான தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, கெ. எ. பி. விஸ்வநாதம், டபுல்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன் முதலியவர்கள் 2-6-38ந்தேதி இங்குவந்து சேர்ந்தார்கள். அவர்களை சுயமரியாதை இயக்கத் தோழர்கள் மிக உற்சாகத்துடன் வரவேற்று சங்கக்கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

மாலை பொதுக்கூட்டம்.

அன்று மாலை விக்டோரியா மைதானத்தில் ஒரு மாபெருங்கூட்டம் கூடியது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் சுமார் 10000பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர்கள் பேசும் பிரசங்கத்தை ஜனங்கள் மிக சௌகரியமாக கேட்பதற்காக ஒலி பரப்பும் கருவி அமைக்கப் பட்டிருந்தது

கூட்டத்திற்கு உள்ளூர் பிரபல வக்கீலும் முனிசிபல் கௌன்சிலருமான தோழர் கெட்டோ அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தோழர் கெ.எ.பி. விஸ்வநாதம் அவர்கள் முதலில் பேசும்போது காங்கரஸ் மந்திரிகள் செய்யும் கொடுமைகளையும், ஹிந்தியால் தமிழர்கள் அடையப போகும் கஷ்டத்தைப்பற்றியும் மிகவிளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து காங்கரஸ் ஏற்பட்டதின் நோக்கம், அதுமுன் செய்து வந்த வேலைகள், தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள், ஹிந்தி கட்டாய பாடத்தின் நோக்கம், எதிர்ப்பவர்களை அலக்ஷ்பம் செய்து வரும் விதம், ஹிந்தியை ஒழிக்க வேண்டியதன் அவசியம் இவைகளைப்பற்றி மிகவிளக்கமாகப் பேசினார்.

பின் தலைவர்முடிவுரையுடன் தோழர் சித்தையன் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

(கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் அளித்த ஆணித்தரமான பதிலும் மற்ற முழுவிபரமும் பின்னால் வெளி வரும்)